

வில்லிவாக்கம் தொகுதி வாக்களர் பாகம் வாரியாக வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டு அந்த வழக்கறிஞர்களுக்கு தற்சமயம் தேர்தல் ஆணையம் வழங்கும் வாக்காளர் தகவல் சீட்டு மற்றும் மூத்த குடிமக்கள் தபால் வாக்குகள் குறித்து விழிப்புணர்வு மற்றும் பயிற்சியுடன் கூடிய கையேடு வழங்குவது குறித்து நடத்தப்பட்ட கூட்டத்திற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வானவில் விஜய் தலைமையில், பார்வையாளர் வழக்கறிஞர் வி.அருண் மற்றும் பகுதி செயலாளர்களின் உறுதுணையுடன் வேட்பாளர் கார்த்திக் மோகன் ஆலோசனையுடன் அனைத்து வழக்கறிஞர்களும் கலந்து கொண்டு சிறப்பாக செயல்படுவதற்காக ஆலோசனை கூட்டம் வில்லிவாக்கம் வழக்கறிஞர் வார்ரூமில் நடைபெற்றது.



திருவொற்றியூர் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் எல்.சுந்தர்ராஜ் அவர்கள் 9 ஆவது வட்டத்திற்குட்பட்ட நடபாய்தோட்டம், துலுக்கானம் தெரு, சோமசுந்தரம் நகர் பகுதிகளில் தேர்தல் பணிக்குழு தலைவர் கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு முன்னிலையில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பெண்கள் ஆரத்தி எடுத்து வெற்றி திலகமிட்டு வரவேற்றனர் உடன் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ் கணேசன் பகுதி நிர்வாகிகள் ஆர்.சி. ஆசைத்தம்பி, எம்.வி.குமார், இரா குமரேசன், கே. பிரபாவதி, வட்ட செயலாளர் எம்.எல். சரவணன்,எஸ்.கண்ணையன், வி.பழனிவேல், தேரடி பரமசிவம், து. செங்குட்டுவன், பகுதி பிரதிநிதி கா. சீனிகண்ணன், கே. ஆர். சி. ஜெயக்குமார் ராஜா, எஸ்.பிரகாஷ் எஸ். சரவணன் பி. உதயகுமார், பி. அவினாஷ், பிரேம் ரமேஷ், ஸ்ரீதர், கே.குணசேகர், எல். பலராமன், என் ஆனந்தன் எஸ். முருகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## வெற்றிக்கு சூளுரைக்கும் 'வார் ரூம் செயலி'

# மக்களுடன் ஸ்டாலின் - "வார் ரூம் செயலி" அறிமுகம் மற்றும் BDAகள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு

சட்டப்பேரவைத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைக்கும் வகையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே மக்களோடு மக்களாக இருந்து களப்பணியாற்றி வருகிறது கழகம்.

மாண்புமிகு முதலமைச்சர் **கழகத் தலைவர்** அவர்களின் வழிகாட்டலின் பேரில் பல்வேறு உத்திகளை செயல்படுத்தி சட்டப்பேரவைத் தேர்தலை எதிர்கொண்டு வருகிறது கழகம். அந்த வகையில் தேர்தல் நாளான ஏப்ரல் 23 ஆம் தேதி வாக்குச்சாவடி முதல், தலைமைக் கழகம் வரை ஒருங்கிணைக்கும் வகையில், மக்களுடன் ஸ்டாலின் 'வார் ரூம்' செயலி அறிமுகப் படுத்தப்பட உள்ளது. இந்த செயலி மூலம் தேர்தல் நாளின் போது அனைத்து வாக்குச்சாவடிகளும் ஒருங்கிணைந்து செயல்படவும், ஒவ்வொரு வாக்குச்சாவடியின் களநிலவரத்தையும் நேரடியாக தலைமைக் கழகம் மூலம் கண்காணிக்கும் வகையிலும் பயன்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு முழுவதும் உள்ள 75,032 வாக்குச்சாவடிகளிலும் தேர்தல் நாளில் வாக்குப்பதிவு தொடங்கியதில் இருந்து, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் எவ்வளவு வாக்குகள் பதிவாகி உள்ளன என்ற தகவல், வாக்குச்சாவடியில் எழும் புகார்கள் மற்றும் தேர்தல் நிறைவடைந்த பிறகு 17சி படிவத்தை டிஜிட்டல்படுத்துதல் என தேர்தல் நடைமுறைகளின் துல்லியத்தை உறுதி செய்யும் பணிகளை கழக தகவல் தொழில்நுட்ப அணியின் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள உள்ளனர்.

இந்த பணிகளை மேற்கொள்ள மாநகர, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் தங்கள் பொறுப்புக்கு உட்பட்ட வாக்குச்சாவடிகளில் ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை(BDA) உடனடியாக இப்பணிக்கு நியமிக்க வேண்டும்.

ஐந்துக்கும் குறைவான வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு குறைந்தபட்சம் ஒருவர் எனவும், ஐந்துக்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகளைக் கொண்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு சராசரியாக 5 பாகத்திற்கு ஒரு BDA வீதம் நியமிக்க வேண்டும். ஏற்கனவே உள்ள பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளாக (BDA) தேவைக்கேற்ப தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டும். வார் ரூம் செயலி பணிக்கு நியமிக்கப்படும் பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளுக்கு (BDA) தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பில் வார் ரூம் செயலியை எப்படிப் பயன்படுத்துவது என்பதற்கான பயிற்சி வழங்கப்படும்.

பூத் டிஜிட்டல் ஏஜென்டுகள் (BDA) மேற்கொள்ள இருக்கும் மேற்சொன்ன பணிகளை, அந்தந்த வாக்குச்சாவடிக்குப் பொறுப்பு வகிக்கும் மாவட்ட கழக செயலாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், வழக்கறிஞர் அணி சார்பில் நியமிக்கப்பட்டுள்ள தொகுதி பொறுப்பாளர், தொகுதி மற்றும் வாக்குச்சாவடி அளவிலான நிர்வாகிகள் கண்காணிப்பது அவசியம்.

மக்களுடன் ஸ்டாலின் வார் ரூம் செயலி மூலம் தேர்தல் நாளின் போது உடனுக்குடன் பெறப்படும் தகவல்கள், புள்ளிவிவரங்கள் நமது கழக வெற்றியை உறுதி செய்வதற்குத் துணை நிற்கும்.

மக்களுடன் ஸ்டாலின் 'வார் ரூம்' செயலியைப் பயன்படுத்த பூத் டிஜிட்டல் ஏஜென்டுகளை (BDA) நியமிப்பது, அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது உள்ளிட்ட ஆயத்தப் பணிகள் முழுமையாக நடைபெறுவதை மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள் உறுதி செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**

**"அண்ணா அறிவாலயம்"**
**சென்னை18. தி.மு.க.**
**நாள் : 13-4-2026.**

# "சித்திரைத்திங்களில் முத்திரைப்போர்"....

**ஒ**ரு பக்கம்
பெற்ற மகனின் துரோகத்திற்கு
பாடம் புகட்டத் துடிக்கும் தந்தையாக
மருத்துவர் ராமதாஸ் ..

அவரோடு சேர்ந்து தன் முதுகில் குத்திய எடப்பாடிக்கும்
அந்த துரோகியோடு சேர்ந்து கொண்டு
தன் நெஞ்சிலேயே குத்திய
தன் அக்காள் மகன் தினகரனுக்கு
பாடம் போதிக்க களம் குதித்துள்ள சின்னம்மா சசிகலா...

இவையாவுக்கும் மேலாக திராவிடத்திலிருந்து தமிழினத்தை
பிரிக்க
நாம் தமிழர் சீமான் என்றும்...



அதே திராவிடத்திலிருந்து சிறுபான்மை சமூகங்களை பிரித்துச் சிதைக்க
நடிகர் விஜய்க்கு "ஜோசப் விஜய்" என மத அடையாளம் கொடுத்து
தூண்டப்பட்டுள்ள
த.வெ.க.வையும்
தங்களுக்கு
புறத்துணையாக வைத்துக் கொண்டு..

"ஒன்றை எதிர்த்து அழிப்பது
மற்றொன்றை ஆதரித்து ஒழிப்பது"
என்னும் நாக்பூர் சூழ்ச்சியோடு

திராவிட அரசியலை வேரறுக்கும் வெறியோடு

திராவிட கட்சி ஒன்றையே ஆயுதமாக்கிக் கொண்டு

பல பாதாளத் திட்டங்களோடு களமிறங்கியிருக்கும்
"பாரதீய ஜனதா"வின்
சித்தாந்த பகையை முறியடிக்க ...

ஆரியத்துக்கு எதிராக
பெரும் போர்
நடத்தி வருகிறார்
திராவிடச் சூரியனாம்
"முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்"

ஆம்....

இது தமிழ் மண்ணுக்கான தேர்தல்
என்பதை விட

இது
புறநானூற்று பூகோளத்தை அடிமைப்படுத்த
நினையும்

வடக்கிந்திய கம்பெனிக்கு எதிரான
ஜனநாயகப் போர் என்பதே
நிச்சயம்..

இதில்

பெரியாரும்
அண்ணாவும்
கலைஞரும்
மடியிட்டு
வளர்த்த திராவிடப் பெரும்படை
வென்று காட்டும் என்பது சத்தியம்...

விழிப்பாய்
தம்பி
நெருப்பாய்...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*

## கழக – கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து இன்று பொதுக்கூட்டம்:

# வேலூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பரப்புரை!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிக்கை!

*வேலூர், ஏப். 14 -* நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து வேலூரில் பொதுக் கூட்டம் வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பரப்புரை ஆற்ற உள்ளார்.

இதுகுறித்து மாவட்டப் பொறுப்பாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் திராவிட மாடல் ஆட்சி கழக தலைவர் - தமிழ்நாடு முதல்வர் அவர்கள், தலைமையில்



இரண்டாவது முறையாக ஆட்சி கட்டிலில் அமர்ந்து இந்திய மாநிலங்களில் தமிழ்நாட்டை மேலும் வளர்ச்சி பெற்ற முதன்மை மாநிலமாக கட்டமைப்பு செய்திட ஏதுவாகவும், மதம், இனம், மொழி அடிப்படையில் இந்திய ஒன்றியத்தை கபளிகரம் செய்திட ஆர்.எஸ்.எஸ் உள்ளிட்ட பாசிச பா.ஜ.க.வின் பிரித்தாலும் அரசியலால் தமிழகத்தில் காலூன்ற துடிக்கும் மனிதமற்ற அரசியலை விரட்டி அடித்து தமிழ்நாடு, தமிழ்மொழி, தமிழ் இனம் நலன் காத்து எதிர்கால சந்ததிகளின் அச்சமற்ற வாழ்வாதாரத்தை உறுதி செய்திடும் வகையில் எதிர் வரும் 23.04.2026 அன்று நடைபெற உள்ள சட்டமன்ற பொது தேர்தலின் வாயிலாக தமிழர்களின் ஒருமித்த ஆதரவினால் வெற்றி பெற இன்று (14.04.2026 - செவ்வாய்க்கிழமை) மாலை 5.00 மணிக்கு வேலூர் மாவட்டம், சென்னை - பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி, கந்தனேரியில் வேலூர் மாவட்டதிற்குட்பட்ட காட்பாடி - கழக பொது செயலாளர் துரைமுருகன், வேலூர் ப.கார்த்திகேயன், அணைக்கட்டு ஏ.பி. நந்தகுமார், கீ.வ. குப்பம் - மருத்துவர் எம். ராஜேஷ்வரி மற்றும் குடியாத்தம் கே.பி. பிரதாப் ஆகிய 5 சட்டமன்ற கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பரப்புரை ஆற்ற உள்ளார்.

இக்கூட்டத்தில் கழக பொது செயலாளர் துரைமுருகன், கழக வடக்கு மண்டல தேர்தல் பொறுப்பாளர் எ.வ. வேலு, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் மற்றும் கூட்டணி, தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்துக்கொண்டு சிறப்புரை ஆற்ற உள்ளார்கள். எனவே, ஒருங்கிணைந்த வேலூர் மாவட்ட தி.மு.க. விற்குட்பட்ட மாவட்ட நிர்வாகிகள், கூட்டணி மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில அணிகளின் துணை செயலாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், வட்ட, வார்டு, ஊர்க்கிளை நிர்வாகிகள், கழக இந்நாள் முன்னாள் முன்னோடிகள், பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்துகொண்டு ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும் என்பதற்கேற்ப ஒன்றிணைவோம் வெற்றி பெறுவோம்.

இவ்வாறு வேலூர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ. தனது அறிக்கையின் வாயிலாக தெரிவித்துள்ளார்.





சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளரும், அண்ணாநகர் சட்டமன்ற கழக வெற்றி வேட்பாளருமான நே.சிற்றரசுக்கு 106 வது வட்டத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் தொழிலாளர் முன்னேற்ற சங்க பேரவைத் தலைவர் கி.நடராசன் ஆகியோரின் வழிகாட்டுதல்படி, மாநகர் போக்குவரத்து கழக ஊழியர் முன்னேற்ற சங்க பொதுச் செயலாளர் த.சரவணகுமார், பொருளாளர் கி.சீனிவாசன், தலைமை நிலையச் செயலாளர் செயலாளர் அ.தங்கராஜ், நிர்வாக பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.மகேந்திரன் மற்றும் சங்க நிர்வாகிகள், முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர்.





சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதியில் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் போட்டியிடும் கழக வேட்பாளர் மயிலை த.வேலுவை, மயிலை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சீ. வி. மணிகண்டன் தலைமையில் உதயநிதி ஸ்டாலின் மக்கள் மன்றத்தை திறந்து வைத்தார். மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி, 123 அ வட்ட செயலாளர் ராஜேந்திரன், பகுதி துணை செயலாளர் அகல்யா விஸ்வநாதன் , மயிலை மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் சீ. வி. திவான் குமார் மற்றும் 123 அ வட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.